பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 14 திங்கட்கிழமை 28.06.2021 கதிர் 101

## மேலும் சில பிரதேசங்கள் இன்று தொடக்கம் முடக்கம்


கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக இரண்டு மாவட்டங்களில் சில பிரதேசங்கள் இன்று காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொரகல்ல கிராம சேவகர் பிரிவின்

☞2

# கொழும்பில் மேலும் ஒருவர் ‘டெல்டா’வுடன் அடையாளம்

## இதுவரை 8 பேருக்குத் தொற்று உறுதி



ஆபத்தான ‘டெல்டா’ கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் ஒருவர், கொழும்பு மாவட்டத்திலுள்ள கஹதுடுவ பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயது நபரே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்று கஹதுடுவ பொதுசுகாதார வைத்திய அதிகாரி தனுக பத்மராஜ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக இலங்கையில் ‘டெல்டா’ வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 8ஆக உயர்வடைந்துள்ளது.

☞2

## இந்திய மீனவர்களாலும் ‘டெல்டா’ பரவும் ஆபத்து!

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி எச்சரிக்கை

மனிதனை மூச்சுத்திணற வைத்துக் கொல்லும் டெல்டா கொரோனா வைரஸ், இலங்கையில் விமான நிலையங்கள் மூலமாக மட்டுமன்றி வடபகுதியில் இந்திய மீனவர்கள் ஊடாகவும் மேலும் பரவக் கூடும். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதியில் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

-இவ்வாறு வலியுறுத்தினார் தொற்று நோய்கள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே.

☞2

# எம்.பியாகும் வேண்டுகோளை பஸில் நிராகரிக்கவே முடியாது

## இந்தத் தடவை நாடாளுமன்றம் வந்தே ஆகவேண்டும் என்று சாகர வலியுறுத்து




**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்று வர வேண்டும் என்று இம்முறை தாம் முன்வைக்கும் கோரிக்கையை அவரால் நிராகரிக்க முடியாது என்று கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.**

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

☞2

# அமைச்சுப் பதவியை நான் கோரவில்லை

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பதில்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என இன்று சில ஊடகங்களில் செய்தி வெளியான நிலையில் அதனை அவர் மறுத்துள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்

☞2

# தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கும் பணிகள் யாழில் ஆரம்பம்

(இ.கலையமுதன்)



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று முதல் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

முதல் டோஸைப் பெற்ற மக்கள் மிகவும் ஆர்வத்துடன் இரண்டாவது

☞2

# கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 428 பேர் சிக்கினார்கள்

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 428 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 644ஆக அதிகரித்துள்ளது.

## சிறையிலுள்ள அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்க!

### ஜனாதிபதியிடம் சார்ள்ஸ் எம்.பி. கோரிக்கை



நீதிமன்ற விசாரணையில் உள்ள அரசியல் கைதிகள், நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு

☞2

# மணிக்கு எதிராக முறைப்பாடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் சபையில் இருந்து தன்னை வெளியேற்ற எடுத்த தீர்மானத்துக்கு எதிராக வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில்

☞2

## எம்.பியாகும் வேண்டுகோளை....................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

'பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்கு நீங்கள் ஏன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுகிறீர்கள்?' என்று சாகர காரியவசமிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ பொதுஜன முன்னணி கட்சியை ஆட்சிப்பீடம் ஏற்றச் செய்ததில் பெரும் பங்காற்றியவர் எனவும், அவர் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும் எனவும் என சாகர காரியவசம் இதன்போது பதிலளித்தார். பஸில் ராஜபக்ஷ நாட்டுக்கு அவசியமான தருணத்தில் பெரும் பங்களிப்புகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கை கட்சி உறுப்பினர்கள் மற்றும் மக்களிடையே ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பஸில் நாடாளுமன்றம் வருவதானால் தமது ஆசனத்தை விட்டுத்தருகிறோம் என கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய மீனவர்........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் பெருந்தொற்றாக உருவெடுத்த டெல்டா கொரோனா வைரஸ் இன்று இலங்கை உள்ளிட்ட 85 நாடுகளுக்குப் பரவியுள்ளது.

இந்த வைரஸ் தொற்றை ஆரம்பத்திலேயே நாம் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் இலங்கை முழுவதும் இந்த வைரஸ் பரவக் கூடும்.

அப்படியான நிலைமை ஏற்பட்டால் நாளாந்தம் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் இங்கு பதிவாகும். இந்தியா போன்று இலங்கையிலும் பிணங்கள்தான் குவியும்.

பேராபத்துமிக்க இந்த டெல்டா வைரஸ் தொற்று தொடர்பில் இலங்கை மக்கள் அலட்சியமாக இருக்கக்கூடாது.

வடபகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. அவர்கள் ஊடாகவும் டெல்டா வைரஸ் இலங்கையில் மேலும் பரவக்கூடும். எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடபகுதியில் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்களுடன் தொடர்பு வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும் - என்றார்.

## கொழும்பில் மேலும்......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மேற்படி நபர் கொழும்பு, கொம்பனி வீதியிலுள்ள பிரதான கட்டுமானத் தளமொன்றில் பணியாற்றி வருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், சிகிச்சைக்காக குறித்த நபர் பொலன்னறுவை கொரோனாச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அவரது மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட 50 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## மேலும் சில பிரதேச......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நொரகல்ல மேல் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புச் செயலணி தெரிவித்துள்ளது.

அத்துடன் அந்த மாவட்டத்தில் யக்தெஹிவத்த கிராம சேவகர் பிரிவின் பின்கந்த 1 மற்றும் பின்கந்த 2 ஆகிய பகுதிகளும், பாதகட கிராம சேவகர் பிரிவின் பின்கந்த 3 பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மொனராகலை மாவட்டத்தின் ஹிதிகிவுல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நக்கலவத்த கிராமம் மற்றும் மில்லகெலே வத்த கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## அமைச்சுப் பதவி.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பிரத்தியேகச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிர்வரும் நாள்களில் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும், அந்தச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனக்கு அமைச்சுப் பதவி அல்லது வேறு எந்தப் பதவியானது வழங்குமாறு அரசிடம் எவ்விதக் கோரிக்கையும் முன்வைக்கவில்லை - என்றுள்ளது.

## தடுப்பூசியின்......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

டோஸைப் பெற்று வருகின்றனர்.

இந்தப் பணி சில தினங்களுக்குத் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும், முதல் கட்டமாக தடுப்பூசி பெற்றவர்களுக்கே இரண்டாம் டோஸ் தடுப்பூசி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 18 இடங்களில் கொரோனாத் தடுப்பூசி இரண்டாவது டோஸ் வழங்கும் பணிகள் இடம்பெறுகின்றன என யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

## சிறையிலுள்ள.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

செய்துள்ள அரசியல் கைதிகள், இன்னும் வழக்குத் தாக்கல் செய்யாத அரசியல் கைதிகள் என அனைத்து அரசியல் கைதிகளையும் மிக விரைவில் விடுதலை செய்ய அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள தமது அலுவலகத்தில் இன்று காலை நடத்திய ஊடக சந்திப்பின்போது கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 24ஆம் திகதி பொசன் தினத்தை முன்னிட்டு நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அரசியல் கைதிகள் 16 பேரை விடுதலை செய்துள்ளார்.

குறித்த 16 நபர்களும் ஏற்கனவே நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டு இன்னும் குறுகிய காலத்தில் தங்களுடைய தண்டனைகே காலத்தை நிறைவு செய்து வெளியில் வர இருந்தார்கள்.

குறிப்பாக அதில் இரண்டு பேர் மாத்திரமே 4 வருடம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியவர்கள். ஏனைய 14 பேரும் ஒரு வருடத்துக்குள் சிறையிலிருந்து வெளிவர இருந்த வேளையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், அரசியல் கைதிகள் அனைவரையும் மிக விரைவில் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் நான் முன்வைக்கின்றேன்.

குறித்த அரசியல் கைதிகளோடு சேர்த்து தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு அரசியல் பிரமுகரான மரணதண்டனைக் கைதி ஒருவரையும் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார்.

குறித்த மரணதண்டனைக் கைதியின் விடுதலையை ஐ.நா. அமெரிக்க செயலகங்கள் எதிர்த்துள்ளன. சட்டத்தரணிகள் கூட குறித்த அரசியல் பிரமுகரின் விடுதலைக்கு ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஏற்கனவே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மிருசுவில் பகுதியில் பொதுமக்களைப் படுகொலை செய்த குற்றவாளியான இராணுவ அதிகாரியை விடுதலை செய்திருந்தார்.

எனவே, ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி இன்னும் சிறையில் இருக்கும் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

இந்தப் புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு, சமூக வலைத்தளங்களில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செய்திகள் பிரசுரித்தார்கள் என்னும் குற்றச்சாட்டில் பலரைப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்திருந்தது. அவர்களையும் ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும்.

இதேவேளை, நாட்டில் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெறுவது கண்டிக்கத்தக்க விடயம் என்பதை நான் இங்கு பதிவு செய்கின்றேன்.

குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பாதிப்புக்களை சிங்கள மக்கள் இப்போதுதான் உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஏனெனில் தென்பகுதியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரசை எதிர்க்கின்றவர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த அரசு கைதுசெய்து வருகின்றது.

அந்தவகையில் தற்போதுதான் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் எவ்வளவு பாதகமானது என்பதை தென்பகுதி சிங்கள மக்கள் உணர்ந்துள்ளார்கள்-என்றார்.

## மணிக்கு எதிராக.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மாநகர சபை உறுப்பினர் ஜெ.ரஜீவ்காந்த் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதியன்று நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வில், மாநகர சபை உறுப்பினர் வ.பார்தீபன் உள்ளிட்டவர்களுக்கும் ரஜீவ்காந்துக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது 'நாய்' என விழித்துப் பேசியதான குற்றச்சாட்டில் மாநகர சபை உறுப்பினர் ஜெ.ரஜீவ்காந்த், ஒரு மாத காலத்துக்கு சபை அமர்வில் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனக்கு விதிக்கப்பட்ட தடை சட்ட முரணானது எனக் குறிப்பிட்டு, வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் உள்ளூராட்சி ஆணையாளரிடம் மாநகர சபை உறுப்பினர் ஜெ.ரஜீவ்காந்த், மேயருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

45 உறுப்பினர்களைக் கொண்ட மாநகர சபையில் வாக்கெடுப்பு இடம்பெற்ற வேளை அந்த முடிவுக்கு சபையில் 23 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர். 12 உறுப்பினர்கள் நடுநிலைமை வகித்திருந்தனர். சபை நடவடிக்கையில் இருந்து நீக்கக் கூடாது என இரு உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.




மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கல்வி குறித்து வாய்ப் பந்தல்

"வெறுங் கையால் முழம் போடுவது" என்பார்கள். கடந்த வெள்ளியன்று நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ ஆற்றிய உரை தொடர்பில் மக்களின் கருத்து இப்படித் தான் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றது.

கொவிட் தொற்று தடுப்பிலிருந்து, அதையொட்டிய ஏனைய நெருக்கடிகள் வரை பல சிக்கல்களுக்குத் தமது பக்கத் தீர்வை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவிப்பார் என எதிர்பார்த் திருந்த மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அண்மையில் மக்களுக்கு பெரும் அதிர்ச்சியைத் தருவதாக வும், அவர்களது வாழ்வியல் விடயங்களில் நேரடியாகத் தாக் கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்த அம்சம் திடீர் எரி பொருள் விலையேற்றமாகும். இந்த எரிபொருள் விலையேற்றம் மக்களின் ஒவ்வொரு வாழ்வியல் அசைவியக்கத்தையும் மோசமாகப் பாதிக்கும் என்பதனால் அந்தப் பிரச்சினைக்கும் ஒரு நிவாரணத்தை தீர்வை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தருவார் என மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், எதுவும் நடக்கவில்லை. வெறும் வாய்ப்பந்தல் பேச்சு மட்டுமே அரங்கேறியது.

தம்மையும் தமது அரசையும் பற்றி அவர் பீற்றிக் கொண்டமை மட்டுமே நடந்தேறியது. அது சொந்தப் பிரபலாப உரையாக மட் டுமே நடந்து முடிந்திருக்கின்றது.

கல்வித் துறை நிலைமை குறித்து ஜனாதிபதி கோட்டாபய குறிப்பிட்ட விடயங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றை அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்து உதறியிருக்கின்றார் இலங்கை ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோஸப் ஸ்டாலின்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய அந்த உரையில் கல்வி நிலைமை தொடர்பில் முற்றிலும் தவறான, உண்மைக்கு மாறான தகவல்கள் அடங்கியிருக்கின்றன என ஜோஸப் ஸ்டா லின் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இலங்கை ஆசிரியர் சங்கம் திரட்டிய புள்ளிவிவரங்களின் படி குறைந்த பட்சம் அறுபது வீதமான பாடசாலை மாணவர்களின் கல்வி இழக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் ஜனாதிபதியோ தொலைதூர இணைய வழிக் கற்றல் ஊடாகப் பாரிய முன்னேற்றத்தை நாடு கண்டிருப்பதாகப் புளுகுகின்றார். தமது அரசையும் புளுகுகின்றார்.

ஒரு வருடமும் மூன்று மாதங்களுக்கும் மேல் பாடசாலைகள் மூடப்பட்டு கிடக்கின்றன. இதனால் மாணவருக்கும் கல்வித் துறைக்கும் ஏற்பட்டுள்ள இழப்பு அளப்பரியது. மாணவர் கல்வி முற்றாக செயலிழந்த விடயமாகவுள்ளது.

மாணவர்களுக்கு மாற்றீடான கல்வி முறையை அறிமுகப் படுத்துவதில் நாடு பெரும் பின்னடைவு நிலையில் - தோல்விக் கட்டத்தில் - நிற்கின்றது.

இணைய வழிக் கல்விக்கான வசதிகள் அரசினால் சரி யான முறையில் வழங்கப்படவில்லை. கிடைத்தவை கூட சரி யாகப் பங்கிடப்படவில்லை; பகிரப்படவில்லை.

நாட்டில் உள்ள மொத்தம் 43 லட்சம் மாணவர்களின் கல்வி வசதிக்கான தெளிவான பார்வையோ உருப்படியான திட்டங் களோ அரசிடம் இல்லை.

ஆனால், பாடசாலைகள் மூடியிருந்தாலும் தொலை தூர இணைய வழிக் கல்வி ஊடாக நிலைபேறுடைய - பேண்தகு - கல்வி மாணவர்களுக்கு வழங்கப்படுவதாக ஜனாதிபதி தமது உரையில் பீற்றியிருப்பது, இலங்கை ஆசிரியச் சங்கச் செய லாளர் குறிப்பிடுகின்றமை போல முற்றிலும் தவறான, உண்மை க்கு மாறான தகவல்களன்றி வேறில்லை என்பது தெளிவு.

பத்தாயிரம் பாடசாலைகளுக்குத் தேவையான Fiber, Optical போன்ற நவீன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள் ளன என்றும் தமது உரையில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மொத்தமாக இருக்கும் பாடசாலைகளின் எண் ணிக்கை 10 ஆயிரத்து 165. அப்படியானால் ஆக 165 பாடசாலை கள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் எல்லாவற்றுக்கும் இந்த நவீன வசதி கிட்டியிருக்க வேண்டும். எங்கே அந்த வசதிகள் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கிளப்பும் கேள்விக்கு ஜனாதி பதியிடம் மட்டுமல்ல, அவரின் கல்வி அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் உயரதிகாரிகளிடம் கூடப் பதில் இல்லை.

ஆனாலும், கல்வி அமைச்சின் புள்ளி விவரப்படி இணைய வீச்சு இல்லாத பாடசாலைகள் இரண்டாயிரத்துக்கும் அதிக மாகும்.

சரியான இணைய வசதி கிடைக்குமானால் மாணவர்கள் மலை முகடுகளுக்கும், மரத்தின் உச்சிகளுக்கும் ஏறி இணைய இணைப்பைப் பெறுவதற்கு தம்மை ஆபத்துக்குள்ளாக்கத் தேவையில்லை என்பது ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டும் பிற யதார்த்தப் புற உண்மையாகும்.

கொரோனாத் தொற்றுப் பரவலால் கல்வித் துறை அடியோடு வீழ்ந்து கிடக்கின்றது. அதை சரி செய்து, சீராக்குவதற்கு பயனுள்ள எதனையும் செய்யாத அரசு, வெறும் வாயை மெல் லுவது - வெறுங்கையால் முழம் போடுவது - அபத்தத்திலும் அபத்தம்.

# வத்திக்கானின் ஆட்சியா இலங்கையில் நடக்கிறது?

### சிவசேனை கேள்வி




இலங்கையில் தற்போது வத்திக்கான் ஆட்சியா நடக்கிறதென சிவசேனை அமைப் பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந் தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பா ணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப் பியுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் மறவன்புலவு க.சச்சிதானந்தன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

இலங்கையில் ஒழுங்கானதோர் ஆட்சி நடைபெறவில்லை. அரசாங்கம் தோல்வி யடைந்துள்ளது என கத்தோலிக்க முதல் நிலை குருவான கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அண்மையில் தெரிவித்திருந் தார். இது ஒரு கொடுமையான கூற்றாகும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் கத்தோலிக்க மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த விடயத்தில் அரசாங்கம் உரிய நடவடிக்கை களை மேற்கொள்ளவில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேள்வி கேட் பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும் போப்பாண்டவரின் ஆணையை நிறைவேற்றும் கர்தினால், இலங்கை அரசை விமர்சிக்க முடியாது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொத்மலையில் பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன




கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கொத்மலை - கெட்டபுலா கிராம அலுவலகர் (460) காரியாலயத்துக்கு உட்பட்ட பகுதிகள், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில், 14 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது என கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

மேலும் குறித்த பகுதிக்குள் உட் பிரவேசிக் கவும் அங்கிருந்து வெளிச் செல்லவும் மீள் அறிவிக்கும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கெட்டபுலா பகுதியில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இந்தப் பகுதியில் 100 இற் கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதோடு, இன்னும் சிலருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாக கொத் மலை சுகாதார வைத்திய அதிகாரி காரியா லயம் குறிப்பிட்டுள்ளது.

# டெல்டா கொரோனா பிறழ்வு வேகமாகப் பரவும் அபாயம்

### சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டு

நாட்டில் டெல்டா கொரோனா பிறழ்வு வேக மாகப் பரவும் அபாயமுள்ளது எனச் சுகாதா ரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு பொது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரி வித்துள்ளார்.

எதிர்காலத்தில் மேலும் பல பிறழ்வுகள் உருவாகக்கூடும் எனவும் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்காவிடின் பாரதூரமான நிலைமையை சந்திக்க நேரிடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தடுப்பூசி செலுத்தப்பட்டாலும் இல்லாவி டினும் சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றுவதன் மூலம் அபாயகரமான சூழல் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

# வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றலை துரிதப்படுத்த அனுமதி

நாட்டில் இருந்து வெளிநாட்டுக்குச் செல் லும் பணியாளர்களுக்கு கொரோனாத் தடுப் பூசிகளை வழங்கும் நடவடிக்கையை துரிதப் படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா ஒழிப்பு செயலணியின் கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட் டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிய கத்தின் ஊடகப்பேச்சாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

அதற்கமைய வெளிநாடுகளுக்குச் செல்வ தற்கு எதிர்பார்த்துள்ள பணியாளர்களுக்கு குறித்த நாடுகளால் பரிந்துரைக்கப்படும் தடுப் பூசிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாழ்வாதாரம் இழந்த குடும்பங்களுக்கு முல்லையில் உலருணவு வழங்கி வைப்பு



நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை காரணமாக முல்லைத்தீவு - சுதந்திரபுரம் பகுதியில் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இத்தாலி மனிதநேய சங்கத்தின் ஏற்பாட்டில் அந்நாட்டைச் சேர்ந்த மகேஸ்வரன் சுதாகர னின் நிதி உதவியில், சுதந்திரபுரம் பகுதி யிலுள்ள 60 குடும்பங்களுக்கு உலருண வுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஜெய காந்தனிடம் குறித்த உலர் உணவுப் பொதி கள் கையளிக்கப்பட்டன.

அதனை பிரதேச செயலாளர், சுதந்திரபுரம் கிராம அலுவலர் ஊடாக வறுமைக் கோட்டி லுள்ள குடும்பங்களுக்கு உணவுப்பொருள் களை வழங்கி வைத்தார்.

# பின்லேடன் தியாகி என இம்ரான் கான் வாய் தவறி தெரிவித்தார்–பாக்.அமைச்சர்



பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் கடந்த ஆண்டு உரையாற்றிய அந்நாட்டு பிரதமர் இம்ரான் கான், பாகிஸ்தானின் அபோட்டாபாத்திற்கு வந்த அமெரிக்கர்கள், தியாகி ஒசாமா பின்லேடனைக் கொன்றனர் என்று பேசியிருந்தார். இம்ரான்கானின் இந்த பேச்சு சர்வதேச அரங்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

இம்ரான் கான் மேற்கண்டவாறு பேசி ஏறத்தாழ ஒரு ஆண்டு ஆன நிலையில், இது குறித்து பாகிஸ்தானின் தகவல் துறை மந்திரி ஃபவாத் சவுத்ரி பேசியுள்ளார். ஃபவாத் சவுத்ரி கூறுகையில், இம்ரான் கான் வாய் தவறியே அவ்வாறு பேசிவிட்டார். ஒசாமா பின்லேடனை தீவிரவாதியாகவே பாகிஸ்தான் கருதுகிறது. அல்கொய்தா இயக்கத்தையும் தீவிரவாத இயக்கமாகவே நாங்கள் கருதுகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு, மே மாதம் 2 ஆம் திகதி, பாகிஸ்தானின் அபோட்டாபாத்தில் நுழைந்த அமெரிக்கப் படையினர், அங்கு ஒரு வீட்டில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடனை சுட்டு வீழ்த்தினர். ஒசாமா, அங்குப் பதுங்கியிருந்தமை பற்றித் தங்களுக்குத் தெரியாது என்று பாகிஸ்தான் திட்டவட்டமாகத் தெரிவித்தது.




மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
திருமண சேவை
இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
077 197 1667
077 316 4796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1990.4.6 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 11 செவ் - 05 இல்
தகைமை -கல்வியியல் கல்லூரி
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1993.10.11 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 29 செவ் - 7 இல்
தகைமை - B.sc Civil Eng தொழில் - Singapore Work
எதிர்பார்ப்பு - Eng, Doctor பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1984.9.20 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - 68 செவ் - 8 இல்
தகைமை - B.sc Software தொழில் - Software Eng
எதிர்பார்ப்பு - B.sc கொழும்பு மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1991.11.10 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மூலம் 4
கி.பா - 16 3/4 செவ்/சூரி - 6 இல்
தகைமை - Network Eng தொழில் - UK Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1984.5.23 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 22 செவ் - 4 இல்
தகைமை - Accountant தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK or இலங்கை பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1995.6.7 மதம் - இந்து
ஜாதி - P பகுதி ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 2
கி.பா - 23 செவ் - 03 இல்
தகைமை - A/L தொழில் - Swiss Not PR
எதிர்பார்ப்பு - Swiss PRமணமகள் தேவை.

பிறந்த திகதி - 1993.4.30 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம் 6'
கி.பா - 40 செவ் - 10 இல்
தகைமை - Bsc Software Eng
தொழில் - Company Colombo
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் 5'6' மேல் தேவை.

பிறந்த திகதி - 1988.8.21 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுஷம் 3
கி.பா - 48 செவ் - 7 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Dental Doctor மணமகள் தேவை.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1994.01.01 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 56 செவ் - 07 இல்
தகைமை - HNDA
தொழில் - Management Assistant
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1996.12.12 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூராடம் 2
கி.பா - 24 செவ் - 4 இல்
தகைமை - A/L தொழில் - France PR
எதிர்பார்ப்பு - France இல் சிக்கும்லங்கை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1988.9.27 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரேவதி 4
கி.பா - 51 செவ் - 5 இல்
தகைமை - B.A தொழில் - D.O அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன், Engineer, Accountant ஆசிரியர் 1982 பின்பு.

பிறந்த திகதி - 1990.12.8 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 24 செவ் - 08 இல்
தகைமை - M.B.B.S. தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer மணமகன் தேவை.


பிறந்த திகதி - 1987.9.7 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 87 செவ்/சூரி- 1 இல்
தகைமை - B.sc தொழில் - விஞ்ஞான ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி, அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1992.1.4 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 44 சூரி/செவ் - 12 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1983.4.20 மதம் - இந்து
ஜாதி - P பகுதி பெண் நட்சத்திரம் - புனர்பூசம் 1
கி.பா - 45 செவ்/சூரி - 1 இல்
தகைமை - B.sc
தொழில் - Administration Officer
எதிர்பார்ப்பு - வெளிநாட்டு உள்நாட்டு அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1992.2.28 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூரட் 2
கி.பா - 57 செ - 8 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer கொழும்பு வேலை மணமகன்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

# கிழக்கு ஆசியாவில் 20,000 ஆண்டுகளுக்கு முன்பே கொரோனா இருந்தது? ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு

இன்று உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் கிருமி, கிழக்கு ஆசியப் பகுதியில் கடந்த 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் உலகெங்கிலும் உள்ள 26 வெவ்வேறு மக்கள்தொகைகளில் இருந்து 2 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டவர்களின் மரபணுக்களை ஆய்வு செய்தனர். இதில் கிழக்கு ஆசியாவில் உள்ள நவீனகால மக்கள் மீது கொரோனா வைரஸின் டி. என். ஏ. எனப்படும் மரபணுக்கள் இருப்பதைக் கண்டறிந்தனர்.

சீனா, ஜப்பான் மற்றும் வியட்நாமில் அமைந்துள்ள ஐந்து வெவ்வேறு மக்கள்தொகைகளில் ஒரு கொரோனா வைரஸ் தொடர்பான இந்த மரபணு சமிக்ஞைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

இந்த வைரஸ்தான் பிற்காலத்தில் கொரோனா என்றும் பிளேக் நோயாகவும் உருமாறியிருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

# அமெரிக்காவில் ராட்சத பலூன் தீ விபத்து; 4 பேர் உயிரிழப்பு




அமெரிக்காவில், ராட்சத பலூன் தீ பிடித்து எரிந்த விபத்தில் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நியூமெக்சிக்கோமாகாணத்தில் உள்ள Albuquerque நகரில் ராட்சத பலூனில் 5 பேர் பயணம் மேற்கொண்டனர்.

விமான நிலைய பகுதியில் பலூன் சென்று கொண்டு இருந்த போது எதிர்பாராதவிதமாக கட்டுப்பாட்டை இழந்து மின்சார வயர்களில் உரசி தீ பற்றியது.

இந்த விபத்தில் ராட்சத பலூனில் பயணம் செய்த 4 பேர் பரிதாபமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் இந்த மின் விபத்தால் அங்கு 13 ஆயிரம் வீடுகள் மற்றும் நிறுவனங்கள் இருளில் மூழ்கின என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செக் குடியரசின் பகுதிகளில் வரலாறு காணாத சூறாவளி

செக் குடியரசு நாட்டின் Hodonin-n சுற்றியுள்ள பகுதிகளில்வரலாறுகாணாதகடும்சூறாவளிஏற்பட்டுள்ளது.

செக் குடியரசு நாட்டின் Hodonin-n சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த வியாழக்கிழமையன்று சூறாவளி தாக்கியதில் அங்கு மரங்கள் பெயர்ந்து விழுந்து, பல கட்டிடங்களின் மேற்கூரைகள் பறந்து சேதமடைந்ததுடன், கார்கள் புரட்டிப்போடப்பட்டன.

இதில் 5 பேர் பலியாகி, 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். போலந்து, ஆஸ்திரியா உள்ளிட்ட அண்டை நாடுகளில் இருந்து உதவிக்கு வந்துள்ள அவசர கால பணியாளர்களுடன் சேர்ந்து பொதுமக்களும், சூறாவளியால் ஏற்பட்டுள்ள சேதத்தை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## முன்னாள் காவல்துறை அதிகாரியும் மனைவியும்

# ஜம்மு காஷ்மீரில் வீடு புகுந்து சுட்டுக்கொலை




ஜம்மு காஷ்மீரில் முன்னாள் காவல்துறை அதிகாரியும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் உள்ள ஹரிபரிகம் என்ற கிராமத்தில் நேற்று இரவு முன்னாள் காவல்துறை அதிகாரி பயஸ் அகமதும் அவரது மனைவியுமான ராஜபேகமும் வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த அவர்களது மகள் ராபியா, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர்களைச் சுட்டுவிட்டு தப்பிச்சென்றவர்களை இந்திய இராணுவ வீரர்கள் தேடி வருகின்றனர். அந்தப் பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. ஜம்மு விமானப்படைத்தளத்தில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு அதிர்ச்சி மாறாத நிலையில் நிலையில் முன்னாள் காவல்துறை அதிகாரியும் அவரது மனைவியும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




## ஜம்மு காஷ்மீர் தளத்தில் ட்ரோன் மூலமே தாக்குதல்

இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் விமானப்படைத் தளத்தின் தொழில்நுட்ப கட்டடத்தில் ட்ரோன்களைப் பயன்படுத்தி, இரண்டு முறை வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அவை தொடர்பாக சட்டவிரோதச் செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள்தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.40 அளவில் ட்ரோன்கள் மூலம் அனுப் பப்பட்ட இரு வெடிகுண்டு கள், விமானப் படைத் தளத்தின் தொழில் நுட்பகட்டடத்தின் மேற் கூரையில் 5 நிமிட இடைவெளியில் விழுந்து வெடித்தன. இந்தத் தாக்குதலில் விமானப்படைஊழியர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து தாக்குதலுக்கு உள்ளான பகுதி பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டது. சம்பவ இடத்துக்குவிரைந்த ஜம்மு-காஷ்மீர் காவல் துறையினர், சி.ஆர்.பி.எப்பின் டி.ஐ.ஜி., தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் உள்ளிட்டோர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர்.

சட்டவிரோதச் செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து ஜம்மு-காஷ்மீர்பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர். இந்த வழக்கைதேசியபுலனாய்வு முகமைக்கு மாற்ற மத்திய அரசு பரிசீலித்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவில் ட்ரோன் மூலம் நடத்தப்பட்ட முதல் வெடிகுண்டுத் தாக்குதல் இதுவாகும். பாகிஸ்தான் எல்லையில் இருந்து 14 கிலோ மீற்றர் தொலைவில் இந்திய விமானப்படைத் தளம் உள்ள நிலையில், சில கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தே ட்ரோன்கள் அனுப்பப்பட்டமை விசாரணையில் தெரியவந்துள்ளது. இது எல்லைதாண்டிய தாக்குதலாக இருக்குமா? என்ற கோணத்திலும் விசாரணை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. விமானப் படைத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த உலங்கு வானூர்தியை தீவிரவாதிகள் குறி வைத்தனர் எனவும், ஆனால் அது அவர்களுக்குச் சாத்தியப்படவில்லைஎன்றும்விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படைத் தளபதி ஆர்.கே.எஸ். பதூரியா அரசு முறைப் பயணமாக வங்க தேசத்துக்குச் சென்றுள்ளமையால், ஏயார் மார்ஷல் விக்ரம் சிங்கை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடர்பு கொண்டு நிலைவரங்கள் குறித்து விசாரித்துள்ளார். இச்சம்பவத்தின் எதிரொலியாக தாக்குதலுக்கு ஆளான பதான் கோட் மற்றும் அவந்திப்பூர் விமானப் படைதளங்களுக்கு பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பாதுகாப்பு வீரர்கள் உஷார் படுத்தப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தமிழ் மொழியின் மிகப்பெரிய அபிமானி நான்!

### மன் கி பாத் நிகழ்ச்சியில் மோடி பேச்சு



தமிழ் மொழியின் பால் என்னுடைய அன்பு என்றுமே குறையாது எனப் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மன் கி பாத் நிகழ்ச்சி மூலம் நேற்று உரையாற்றினார். அந்த உரையின்போது தமிழ் மொழி தனக்குப் பிடித்தமான மொழி என்று பேசினார்.

உலகிலேயே தமிழ்மொழி சிறந்த மொழி. தமிழ் மொழியை எனக்கு மிகப் பிடிக்கும். இந்த மொழியின் ரசிகன் நான். நான் உலகின் பழைமையான மொழியான தமிழ்மொழி மற்றும் தமிழ் கலாசாரத்தின் பெரிய அபிமானி. தமிழ் மீதான என் அன்பு என்றும் குறையாது. தமிழ் குறித்து எனக்கு மிகவும் பெருமிதமாக உள்ளது என இதன் போது மோடி கூறினார்.

மேலும் சென்னையைச் சேர்ந்த குரு பிரசாத் என்பவர், மன் கி பாத் உரையின்போது தமிழ் நாடு குறித்தும் தமிழ் மொழி குறித்தும் தான் பேசியதை தொகுத்து புத்தகமாக வெளியிட்டிருந்தமையும் அவர் குறிப்பிட்டார்.

MyGov தளத்தில் குரு பிரசாத் அவர்களின் பதிவிலிருந்து சில வரிகளை மேற் கொள்ள காட்ட விரும்புகிறேன். நீங்கள் தமிழ்நாடுபற்றிப்பேசும்போதெல்லாம் என்னு டைய ஆர்வம் மேலும் அதிகரிக் கிறது. தமிழ் மொழி, கலாச்சாரம், பண்டிகைகள் மற்றும் தமிழ் நாட்டின் முக்கியமான இடங்கள் பற்றியும் பேசியிருக்கிறீர்கள். மனதின் குரலில் நீங்கள் தமிழ் நாடு குறித்து என்னவெல்லாம் கூறியிருக்கிறீர்களோ அதனை ஒன்று திரட்டி மின் புத்தகம் ஒன்றை நான் தயார் செய்திருக்கிறேன். இதனை NamoApp இல் வெளியிட முடியுமா? எனக் குரு பிரசாத் கேட்டுக்கொண்டார் என்றும் மோடி கூறினார். தமிழ் மொழியின் பால் என்னுடைய அன்பு என்றுமே குறையாது. உங்கள் வருங்கால முயற்சிகளுக்காக வாழ்த்துக்கள் என மோடி தனது உரையில் தெரிவித்தார்.

## பேரணியில் ஈடுபட்ட விவசாயிகள் மீது பதிவு செய்த வழக்குகள் திரும்பப் பெறப்பட வேண்டுமென கோரிக்கை

போராட்டப் பேரணியில் ஈடுபட்ட விவசாயிகள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும் என சம்யுக்ட் கிசான் மோர்ச்சா (எஸ்.கே.எம்.) அமையம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இந்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக நாடு முழுவதும் நடக்கும் ஏழு மாதத் தொடர் போராட்டங்களைக் குறிக்கும் வகையில், விவசாயிகள் சனிக்கிழமையன்று பல்வேறு மாநிலங்களில் உள்ள ஆளுநர்களிடமும் நினைவுக்குறிப்பை சமர்ப்பிக்க ராஜ் பவன்களை நோக்கி பேரணியாக அணிவகுத்துச் சென்றனர்.

இது தொடர்பாக சண்டிகரில் பல எஸ்.கே.எம். தலைவர்கள் மற்றும் பல விவசாயிகள் அமைப்பின் தலைவர்களுக்கு எதிராக 147, 148, 149, 186, 188, 332 மற்றும் 353 ஐ.பி.சி. பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



இந்தப் பேரணியின்போது சாலைகளை தடுத்து நிறுத்திய பொலிஸார், எங்கள் மீது தண்ணீர்ப் பீரங்கிகள் மற்றும் தடியடியை மேற்கொள்ளவும் முயன்றனர். இத்தகைய ஜனநாயக விரோத மற்றும் சர்வாதிகார நடத்தைக்கும் மேலாக, இப்போது எஸ்.கே.எம். தலைவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது ஜனநாயகத்தின் தோல்வியாகவும் அறிவிக்கப்படாத அவசரநிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் உள்ளது. எனவே, விவசாயிகள் மற்றும் தலைவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை உடனடியாக நிபந்தனையின்றி திரும்பப் பெறவேண்டும் என்று எஸ்.கே.எம். வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்திய அரசின் மூன்று வேளாண் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கும் அமைப்பாக எஸ்.கே.எம். உள்ளது.

இந்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் டெல்லி மற்றும் ஹரியானா இடையேயான சிங்கு, திக்ரி மற்றும் காசிப்பூர் எல்லைகளில் முகாமிட்டு விவசாயிகள் தங்கள் போராட்டத்தைத் தொடங்கினர்.

கடந்த 7 மாதங்களாக இந்தப் போராட்டம் இயற்கை மற்றும் கொரோனாச் சவால்களைக் கடந்து தொடர்ந்து வருகிறது.

# மட்டக்களப்பு – திருகோணமலைக்கு இன்று தொடக்கம் பஸ் சேவைகள்

மட்டக்களப்பு - திருகோணமலைமாவட்டங்களிலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சேவைகள் இன்று திங்கள் தொடக்கம் இடம்பெறவுள்ளன என மட்டக்களப்பு சாலை நிருவாகம் அறிவித்துள் ளது.

இச்சேவை மட்டக்களப்பு பஸ் நிலையத்திலிருந்து காலை 5.40 இற்கு புறப்பட்டு திருகோணமலையைச்சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. காத்தான்குடி சாலையிலிருந்தும் திங்கள் காலை ஆறு மணிக்கு திருகோணமலைக்கான பஸ் சேவை ஆரம்பமாகிறது என சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டில் எதிர்வரும் வாரத்தில்கூட மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்து சேவைகள் இடம்பெறாது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பொதுப் போக்குவரத்துச்சேவையை மீண்டும் தொடங்க கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் பரிந்துரைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு வர்த்தக நிலையங்களை திறப்பதற்கு இன்று முதல் அனுமதி



மட்டக்களப்பிலுள்ளஅனைத்து வர்த்தக நிலையங்களையும் இன்று (28) காலையில் இருந்து மாலை 9 மணிவரை திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆலயங்கள் மற்றும் அனைத்து மதஸ்தானங்களில் ஆராதனைகள், உற்சவங்கள் இடம்பெறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தடுப்பு செயலணியுடன் இடம்பெற்ற கலந்துரையடல் தொடர்பாக நேற்று (27) ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே கருணா கரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின்படி எந்தவிதமான ஆலய உற்சவங்கள் மற்றும் விழாக்கள் ஆகியவை இடம்பெற தடை விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நடைமுறை சுகாதார அமைச்சினால், சுற்றறிக்கை மறுபரிசீலனை செய்யும் வரை நடைமுறையில் இருக்கும்.

இதேவேளை இன்று காலையில் இருந்து மாலை 9 மணிவரை அனைத்து வர்த்தக நிலையங்களையும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி 9 மணிக்குப் பின்னர் திறந்திருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வர்த்தக உரிமையாளர்கள் வர்த்தக நிலையம் திறந்திருக்கும் நேரம் கண்டிப்பாக சுகாதார அறிவுறுத்தலை பேணி, நுகர்வேரை அதிகமாக உள்வாங்காது முகக்கவசம் கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும் என்பதுடன் கை கழுவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும்.

இந்த செயற்பாடுகளை மேற்கொள்ளாத வர்த்தகநிலைய உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அம்பாறை– நிந்தவூர் வீதியில் வாகனம் தடம்புரண்டு விபத்து



அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் அல்லி முல்லை பிரதான வீதியில் நேற்று வாகன விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

வாகனத்தின் சாரதி தூக்கத்துடன் வாகனத்தினை செலுத்தியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாகனத்தின் சாரதி தற்போது நிந்தவூர் ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலையின் பல பகுதிகளிலும் முன்னறிவித்தலின்றி நீர் வெட்டு அமுல்!

திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் முன்னறிவித்தலின்றி நடைபெற்று வரும் நீர் வெட்டு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலைய காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தில் குடிநீர் தடைப்படுவதற்கான காரணங்கள் மற்றும் நீர் வெட்டின் தாக்கங்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் கிழக்கு மாகாண வடிகாலமைப்பு பொறியியலாளர்,முகாமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

# மட்டக்களப்பில் கணேசபுரம் வீதியை சீரமைக்க கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட கணேசபுரம் கிராமத்தின் முதலாம் வட்டார பிரதான வீதி மிகவும் நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்படுவதனால் அவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் பயணிக்கிறோம் என கவலை தெரிவிக்கின்றனர். சுற்றிவர வயல் நிலத்தை ஊடறுத்துச் செல்லும் இவ்வீதியை அக் கிராம மக்கள், விவசாயிகள், மாணவர்கள் எனப் பலரும் தினமும் பயன்படுத்தி வருகின்றனர். மழை வெள்ள காலத்தில் முற்றாக வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்படும் இவ்வீதி ஏனைய காலத்தில் சிறுபோகவேளாண்மைச்செய்கைக்குப் பயன்படுத்தும்நீரும் குறித்த வீதியை ஊடறுத்துப் பாய்வதனால் அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்திற்குற்பட்டே போக்குவரத்துச் செய்து வருவதாக கவலை தெரிவிக்கின்ற னர். எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அப்பகுதி மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு துரிதகதியில் குறித்த வீதியை செப்பனிட்டுத் தருமாறும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சொர்க்கம் திருமண சேவை

மணமகன் விபரம்

பிறந்த திகதி - 1990.10.21 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 4 இல்
நட்சத்திரம் - அனுஷம் 3ஆம் பாதம்
தகைமை - France
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1985.05.15 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் சூரி/ செவ் - 4இல்
நட்சத்திரம் -உத்திரட்டாதி
தகைமை - லண்டனில் Business
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த பெண்.

பிறந்த திகதி - 1988.10.10 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - அஸ்தம்
தகைமை - B.A தொழில் - GS
எதிர்பார்ப்பு - படித்த பெண்.

பிறந்த திகதி - 1987.08.19 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - மிருகசீரிடம்
தகைமை - B.sc தொழில் - Teacher
எதிர்பார்ப்பு - அரச சேவை சூரியன் செவ்வாயுள்ள பெண்.

மணமகள் விபரம்

பிறந்த திகதி -1994.05.23 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 4 இல்
நட்சத்திரம் - சுவாதி தகைமை - கனடா
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த மணமகன்.

பிறந்த திகதி - 1981.11.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - திருவோணம்
தொழில் - கனடா (விவாகரத்து)
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த மணமகன்.

பிறந்த திகதி - 1994.04.12 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் சூரி/ செவ் - 7 இல்
நட்சத்திரம் - பரணி
தகைமை - Computer Science Engineering
தொழில் - Data Process Analyst
எதிர்பார்ப்பு - Engineer, Doctor

பிறந்த திகதி - 1990.8.30 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் நட்சத்திரம் - மூலம்
செவ் - 8இல் தகைமை - Pharmacy
தொழில் - Pharmacy IST
எதிர்பார்ப்பு - தனியார் அல்லது அரச உத்தியோகம்.

102/A பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம். www.sorkham.com
தொடர்புக்கு - 001416661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515



## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்

# போர்த்துக்கலை வெளியேற்றி காலிறுதியில் நுழைந்தது பெல்ஜியம்

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் நொக்-அவுட் சுற்றுப் போட்டியில் இன்று அதிகாலை நடந்த போட்டியில் ஐரோப்பிய சம்பியனான போர்த்துக்கல் அணியை பெல்ஜியம் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது. 42 ஆவது நிமிடத்தில் ஹசார்ட் அடித்த கோல்தான் பெல்ஜியத்தின் வெற்றி கோலாக அமைந்தது.

கிறிஸ்டியானோ ரொனால்டோ விளையாடும் இறுதி யூரோ கிண்ணத் தொடர் இது என்று கருதப்படுவதாலும், ரொனால்டோவினால் 110 கோல்கள் அடித்து அதிக கோல்களுக்கான உலக சாதனையை நிகழ்த்த முடியாமல் போனதாலும் போர்த்துக்கல் அணியின் ரசிகர்கள் இந்தப் போட்டியின் முடிவினால் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் உலகின் முதல் நிலையில் உள்ள பெல்ஜியம், காலிறுதியில் இத்தாலியைச் சந்திக்கிறது. இத்தாலி அணி ஒஸ்திரியாவை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர்

# காலிறுதிக்கு முன்னேறி ஆச்சரியமளித்த செக்.குடியரசு



புடாபெஸ்ட்டில் நடைபெற்ற யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் நேற்றைய இரண்டாவது நொக்-அவுட் போட்டியில் சற்றும் எதிர்பாராத செக். குடியரசு அணி 2-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை அதிர்ச்சித் தோல்வியுறச் செய்து காலிறுதிக்குள் நுழைந்தது.

கிண்ணத்தை வெல்ல வாய்ப்புள்ள அணி என்று கருதப்பட்ட நெதர்லாந்து அணியின் தடுப்பு வீரரான மத்திஸ் டிலித், செக். குடியரசின் கோல் அடிக்கும் வாய்ப்பை தடுக்க வேண்டுமென்றே பந்தைக் கையால் தட்டிவிட்டு ஒரு மிகப் பெரிய தவறைச் செய்ததால் சிவப்பு அட்டை வழங்கப்பட்டு வெளியேற்றப்பட்டதால் 10 வீரர்களுக்கு குறுக்கப்பட்ட நெதர்லாந்து அதிர்ச்சித் தோல்வி கண்டது.

செக். குடியரசின் 2 கோல்களுமே இடைவேளைக்குப் பின்னர்தான் அடிக்கப்பட்டன. 68 ஆவது நிமிடத்தில் டொமாஸ் ஹோல்ஸ் தலையால் முட்டி முதல் கோலை அடிக்க, 80 ஆவது நிமிடத்தில் பட்ரிக் ஷிக் 2 ஆவது கோலை அடித்தார்.

2014 உலகக்கோப்பையில் பங்கேற்றதன் பின்னர் பெரியதொரு கால்பந்து தொடருக்குத் தகுதி பெற்ற நெதர்லாந்து, நொக்-அவுட் சுற்றில் பரிதாபமாக வெளியேறியது அதன் ரசிகர்களுக்கு ஏமாற்றமே! காலிறுதியில் செக். குடியரசு அணி வலுவான டென்மார்க் அணியை வரும் சனிக்கிழமை சந்திக்கிறது.

# இன்று ஆரம்பமாகிறது விம்பிள்டன்!

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்துப் பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டித் தொடர் லண்டனில் இன்று ஆரம்பமாகி, ஜூலை 11 வரை நடைபெறவுள்ளது.

கொரோனா அச்சத்தால் கடந்த ஆண்டு விம்பிள்டன் தொடர் ரத்தானது. அதனால் இரு ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் விம்பிள்டனில் கால் பதிக்க முன்னணி நட்சத்திரங்கள் ஆர்வமுடன் காத்திருக்கிறார்கள்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 'முதல் நிலை' வீரரும், நடப்பு சம்பியனுமான நோவக் ஜோகோவிச் 'வைல்ட் கார்ட்' சலுகை மூலம் பிரதான சுற்று வாய்ப்பை பெற்ற இங்கிலாந்து இளம் வீரர் ஜாக் ட்ராப்பருடன் மோதுகிறார். இதுவரை 19 'கிராண்ட்ஸ்லாம்' பட்டங்களைக் கைப்பற்றியுள்ள ஜோகோவிச், விம்பிள்டனிலும் வெற்றிபெற்று, அதிக கிராண்ட்ஸ்லாம் வென்றவாகளான ரோஜர் பெடரர், ரபெல் நடால் ஆகியோரின் சாதனையை சமன் செய்யும் வேட்கையுடன் உள்ளார். நடால் இந்த முறை விம்பிள்டனில் விளையாடவில்லை என்று அறிவித்துவிட்டார்.

8 முறை சம்பியனான மூத்த வீரர் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், தனது முதலாவது சுற்றில் 42 ஆம் நிலை வீரர் அட்ரியன் மனரினோவை எதிர்கொள்ளும் வகையில் போட்டி அட்டவணை அமைந்துள்ளது. உலகின் 2 ஆம் நிலை வீரர் மெட்வடேவ், ஜேர்மனியின் லெனார்ட் ஸ்ட்ரப்புடன் தனது ஆட்டத்தைத் தொடங்குகிறார்.

இதே போல் கிரீசின் சிட்சிபாஸ், அமெரிக்காவின் டியாபோவுடன் மோதுகிறார். தொடருக்கு முன்னைய கணிப்புகளின்படிசரியாக நகர்ந்தால் காலிறுதிச் சுற்றில் ஜோகோவிச், அன்ட்ரே ரூப்லெவையும், பெடரர் மெட்விடோவையும் சந்திக்கக்கூடும்.



பெண்கள் ஒற்றையர் பிரிவில் 'முதல் நிலை' வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் ஆஷ்லெ பார்ட்டி, புற்றுநோய் பாதிப்பில் இருந்து மீண்டு மறுபிரவேசம் செய்துள்ள கார்லா சுவாரஸ் நவரோவையும், முன்னாள் நம்பர் வன் வீராங்கனையும், 7 முறை சாம்பியனுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் சாஸ்னோவிச்சையும் எதிர்கொள்கிறார்கள்.

இதற்கிடையே, ஒற்றையர் பிரிவின் நடப்பு சம்பியனான ருமேனியா வீராங்கனை சிமோனா ஹாலெப் தொடரிலிருந்து விலகியுள்ளார். கடந்த மாதம் ரோமில் நடந்த இத்தாலி ஓபின் டென்னிஸ் போட்டியின்போது இடது பின்னங்காலில் காயமடைந்த 3 ஆம் நிலை வீராங்கனையான ஹாலெப் அதில் இருந்து இன்னும் முழுமையாக மீளவில்லை. 'காயத்தில் இருந்து குணமடையாததால் மிகவும் வருத்தத்துடன் விம்பிள்டனில் இருந்து விலகுகிறேன். ஒரு நடப்பு சம்பியனாக அழகான இந்த மைதானத்தில் களம் காணும் ஆவலில் இருந்தேன். துரதிர்ஷ்டவசமாக உடல் ஒத்துழைக்கவில்லை' என்று இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணிக்கு இலகுவான வெற்றி



இந்திய-இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி பிரிஸ்டலில் நேற்று நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

தனது 56 ஆவது அரைச் சதத்தை நிறைவு செய்த கப்டன் மிதாலிராஜ் அதிகபட்சமாக 72 ஓட்டங்களை. அறிமுக வீராங்கனையாக அடியெடுத்து வைத்த பாலி வர்மா 15 ஓட்டங்களில் ஏமாற்றம் அளித்தாலும், 17 வயதான அவர், மூன்று வடிவிலான கிரிக்கெட் போட்டிகளிலும் குறைந்த வயதில் அறிமுகமான இந்தியர் என்ற சிறப்பைப் பெற்றார்.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி 34.5 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 202 ரன்கள் சேர்த்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சுலபமாக வெற்றிபெற்றது. டம்மி பியுமொன்ட் 87, நடாலி சிவெர் 74 ஓட்டங்களை அடித்தனர். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 2 ஆவது ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

# டெல்டா வகை கொரோனாவை சமாளிக்கத் தடுப்பூசி அவசியம்!

## உலக சுகாதார அமைப்பு அறிவுரை

மக்களிடையே இதுவரை பரவிய கொவிட் வைரஸ் திரிபுகளில் டெல்டா வைரஸ் திரிவு அதிக வேகமும் ஆபத்தும் கொண்டது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம் தெரிவித்துள்ளவை வருமாறு -

அதாவது, கொவிட் வைரஸ், பல்வேறு நாடுகளில் மரபணு மாற்றம் அடைந்து பரவி வருகிறது.

இங்கிலாந்து, பிரேஸில், தென் ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் கொவிட் வைரஸ் உருமாற்றம் அடைந்துள்ளது.

எனவே இந்த வைரஸின் திரிவைக் கட்டுப்படுத்த அனைவரும் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் உருமாறிய கொவிட் வைரஸ் மீண்டும் உருமாற்றம் அடைந்து டெல்டா பிளஸ் வைரஸ்களும் பரவ ஆரம்பித்துள்ளன. மிகவும் வேகமாக பரவக்கூடிய டெல்டா வைரஸ் திரிவானது இதுவரை 85 நாடுகளில் பரவியுள்ளது.

இது அதிக வேகமும் ஆபத்தும் கொண்டது. மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது. இது பற்றிய கவலை உலகம் முழுவதும் நிலவுகிறது.

தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களிடம் இந்த வைரஸ் வேகமாகப் பரவுகிறது. அதேபோல் ஊரடங்கு தளர்த்தப்பட்ட நாடுகளிலும் சமூக கட்டுப்பாடுகள் குறைவாக உள்ள நாடுகளிலும் வேகமாக பரவி வருகிறது.

கொவிட் பரவ பரவ அது புதிய வகைகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும். அது வைரஸின் இயல்பாகும். இதற்குத் தடுப்பூசி செலுத்திக் கொள்வதே சிறந்த தீர்வாகும்.

எனவே பொதுமக்கள் இரண்டு தடுப்பூசி மருந்துகளையும் செலுத்திக் கொள்ள தாமதிப்பது கூட வைரஸின் வேகமான வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணம். - என்றார்.

# சுயாதீனத் தடுப்பூசி ஆலோசனை நிபுணர் குழுவில் இருவர் ராஜினாமா

சுயாதீன தடுப்பூசி ஆலோசனை நிபுணர் குழுவில் இருந்து மேலும் இரண்டு உறுப்பினர்கள் ராஜினாமா செய்துள்ளனர். தனிப்பட்ட மற்றும் அதிக வேலைப்பளு என்று காரணம் காட்டியே அவர்கள் குழுவில் இருந்து விலகியுள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் குழுவிலிருந்து கொழும்பு வடக்கு (ராகம) மருத்துவ பீடத்தின் பேராசிரியர் ஏ. பத்மேஸ்வரன் (சமூக மருத்துவர்) விலகினார்.

இதனையடுத்து ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவ அறிவியல் பீடத்தின் பேராசிரியர் நீலிகா மாவளகே கடந்த வாரம் விலகினார்.

எட்டு உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழு மட்டுமல்லாமல், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்தின் பணிநீக்கம் மற்றும் பதவி விலகல்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

பேராசிரியர் பத்மேஸ்வரன் மற்றும் பேராசிரியர் மாளவிகேக்கு முன்னர், நிபுணர் குழுவில் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரமா (மருத்துவர்), வைத்தியர் ராஜீவ டி சில்வா (நோயெதிர்ப்பு நிபுணர்), காந்தி நாணயக்கார (வைராலஜிஸ்ட்), பேராசிரியர் சன்ன ரணசிங்க (சுவாச மருத்துவர்),வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ (குழந்தை மருத்துவர்) மற்றும் வைத்தியர் ஹசித திசேரா (தொற்றுநோயியல் நிபுணர்). ஆகியோரும் விலகியவர்களில் அடங்குகின்றனர்.

முன்னதாக, 3 ஆம் கட்ட சோதனைகளில் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் குறித்த தரவு இல்லாமல் சினோபோர்ம் தடுப்பூசிக்கு ஒப்புதல் அளிப்பதற்கான முரண்பாட்டின் போது சிலர் விலக்கப்பட்டனர்.

இதற்கிடையில், இலங்கையின் கொவிட் -19 அவசர கால பதில் மற்றும் சுகாதார அமைப்புகள் தயாரிப்பின் திட்ட இயக்குநர் வைத்தியர் ஜெயசுந்தர பண்டார கடந்த வாரம் தனது பதவியில் இருந்து விலகினார்.

# இன்றுமுதல் ரயில்களை இயக்க ரயில்வேத் திணைக்களம் முடிவு




இலங்கையில் இன்று முதல் 70 ரயில்களை இயக்க ரயில்வே திணைக்களம் முடிவு செய்துள்ளதாக இலங்கை ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ரயில்களைப் பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும், கொவிட் வைரஸ் பரவாமல் தடுக்க சமூக தூரத்தைப் பராமரிக்கப் பயணிகளுக்கு உதவுவதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அம்பேபுஸ்ஸ, மீரிகம, வெயங்கொட மற்றும் கம்பஹாவிலிருந்து கொழும்பு கோட்டை வரையிலான பிரதான ரயிலில் 11 ரயில் சேவைகள் மேற்கொள்ளப்படும். கரையோரப் பாதையில் 12 ரயில்கள் அலுத்கம, களுத்துறை தெற்கு, வாதுவ, பாணந்துறை, மொரட்டுவ மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடும்.

அவிசாவெல்ல மற்றும் பாதுக்க இடையே களனி வெளி பள்ளத்தாக்கு பாதையில் ஐந்து ரயில்கள். கொச்சிக்கடை மற்றும் நீர்கொழும்பு இடையே புத்தளம் பாதையில் எட்டு ரயில்கள் சேவையில் ஈடுபடும்.

இதேவேளை அத்தியாவசிய சேவைகளில் பயணிக்கும் பயணிகளின் வசதிக்காக ஜூன் 28 முதல் மாகாணங்களுக்கு இடையில் (கண்டி முதல் கோட்டை, பெலியத்த , மருதானை மற்றும் மாஹோ முதல் கோட்டை வரை) ரயில்களை இயக்க ரயில்வே திணைக்களம் திட்டமிட்டிருந்தாலும், தேசிய கொவிட் – 19 தடுப்புக் குழு அதற்கு அனுமதி வழங்கவில்லை என ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# ரூ. 5 ஆயிரம் கிடைக்காதவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள்



சமுர்த்தி பயனாளர்களை தவிர்த்து ஏனையவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பயணக்கட்டுப்பாடு காரணமாக முழுமையாக வருமானத்தை இழந்த நபர்களுக்கு முக்கியத்துவம் வழங்குகிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து சமுர்த்தி பயனாளர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். எனினும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்கவில்லை எனக் கூறி தொடர்ந்து பல தரப்பினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க கோரி பாணந்துறை, பின்வத்தை மீனவர்கள் பலர் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்தமாதம் ஆரம்பமாகும் பாடசாலைகள்? கல்வி அமைச்சு தீவிரமாக ஆராய்கின்றது



பாடசாலை மாணவர்களுக்கு உடனடியாக தடுப்பூசி வழங்கி பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளதாக அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

7 லட்சம் தடுப்பூசிகளை, 11, 12 மற்றும் 13ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்கள் அனைவருக்கும் இந்தத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. அவ்வாறான ஊழியர்கள் 2 லட்சத்து 79 ஆயிரம் பேர் வரையில் உள்ளனர்.

வெகுவிரைவில் தடுப்பூசிகளை வழங்கி விட்டால் ஜூலை மாதம் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியும். எப்படியிருப்பினும் திகதியை தற்போது கூற முடியாத நிலைமை உள்ளது.

இரண்டு தடுப்பூசிகளையும் வழங்க முடியாதென்றாலும் ஒரு தடுப்பூசி வழங்கியாவது பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும். தற்போது திகதி குறிப்பிடப்பட்டுள்ள புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தர பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளை பிற்போடுவதற்கு எந்தத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

எதிர்வரும் நாள்களில் ஏற்படும் நிலைமைகளை கருத்திற்கொண்டு இந்த விடயம் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆயுதங்களுடன் ஐவர் வசமாக சிக்கினார்கள்

இரத்தினபுரி, அங்குலான மற்றும் கல்கமுவ ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளை தம்வசம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அங்குலான பிரதேசத்தில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் கைக்குண்டுகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ஒலிம்பிக்கில் கொவிட் தடுப்பை கடுமையாக்குக தெற்காசிய நாடுகளிடம் ஜப்பான் கோரிக்கை

கடுமையான கொவிட் தடுப்பு முறைகளை பின்பற்றுமாறு, டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை உட்பட ஆறு தெற்காசிய நாடுகளிடம் ஜப்பானிய அரசாங்கம் கேட்டுள்ளது.

இந்த நாடுகளின் வீரர்கள் ஜப்பானுக்கு புறப்படுவதற்கு ஏழு நாள்களுக்கு முன்னர் ஒவ்வொரு நாளும் கொவிட் - 19 சோதனைகளை மேற்கொள்ளுமாறு ஜப்பானின் அரச செய்தி நிறுவனமான பெர்னாமா தெரிவித்துள்ளது.

இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், மாலைதீவு, இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் டெல்டா மாறுபாடு பரவியுள்ளமையை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் 2021, ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்று ஜப்பானிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நாடுகளின் பங்கேற்பாளர்கள் ஜப்பானுக்குள் நுழைவதற்கு முன்பே தடுப்பூசிகளை செலுத்தியிருக்க வேண்டும்.

எகிப்து, வியட்நாம், மலேசியா, பிரிட்டன் மற்றும் பங்களாதேஷில் இருந்து பங்கேற்பாளர்கள் புறப்படுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் ஒவ்வொரு நாளும் சோதிக்கப்பட வேண்டும் என்றும் ஜப்பானிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2021இல் வெளியிடப்பெற்றது.